மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, நான் முதலிலேயே அதற்குப் பதில் சொல்லி யிருக்கிறேன்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: சார், குதிரைப் பந்தயம் சூதாட்டம் என்பதை அமைச்சரவர்கள் ஒப்புக் கொண்டார்கள். இப்படிப்பட்ட சூதாட்டம் பல பொது மக்களுக்குக் கெடுதலாக இருக்கிறது. ஆகவே, இந்த அரசு குதிரைப் பந்தயத்தை ஒழிக்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, சூதாட்டம் எதுவாக இருந்தாலும் அதைப்பற்றி யெல்லாம் ஒழிக்க அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

நாயுடுமங்கலம் கிராமத்தில் உள்ள புறம்போக்கு நிலம்.

*வினா எண் 239—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசபாக்கம் தொகுதி நாயுடுமங்கலம் கிராமத்தில் இருந்த புறம்போக்கு நிலத்தை மின்சார வாரியம் சப்-ஸ்டேஷன் அமைக்கக் கோரி விண்ணப்பம் கொடுத்திருந்தும் தனிப்பட்டவருக்கு அடைமானம் செய்திருப்பது உண்மையா?

(ஆ) ஆம், எனில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(இ) இந்த நிலத்தை விரைவில் மின்வாரியத்திற்கு மறு ஒப்படை செய்ய நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அவர்களுக்கு நீண்ட காலத்திற்கு முன்னால், 1976 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4 ஆம் தேதிக்கு முன்னால் அந்த நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டுள்ளது. அதற்குப் பிறகுதான் எலக்ரிசிட்டி போர்டு நிலம் வேண்டுமென்று கேட்டிருக்கிறது. இதுபற்றி பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, அது ஆளுநர் ஆட்சியின்பொழுது நடந்தது. முதலிலே மின்சார வாரியம் இந்த இடம் வேண்டுமென்று கேட்டிருந்தது. அதற்குப் பிறகு அந்த நேரத்திலே இருந்த அதிகாரிகள் தனிப்பட்டவர்களுக்கு அதை அடைமானம் செய்து கொடுத்திருக்கிறார்கள். ச

1979 மார்ச் 6]

ஸ்டேஷன் வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் கேட்டிருந்தார்கள். இதனால் அது அமைக்கப்படுவது பாதிக்கப்படுகிறது. ஆகவே, அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்த நிலத்தை மின்சார வாரியத்திற்கு ஒப்படைக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் ஆட்சிக்காலத்தில், 1976 ஆம் ஆண்டு 12ஆவது மாதம் 4 ஆம் நாள் அதற்கு ஒப்படை, அன்றைக்குத்தான் இந்த வாரியத்திலே மனுச் செய்திருக்கிறார்கள். ஆனால், இந்த மனுச் செய்வதற்கு முன் அது ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், இவர்கள் மனு செய்த பிறகு அங்கே இருக்கின்ற வருவாய்த்துறை அதிகாரிகள் அதை ரத்து செய்திருக்கிறார்கள். ரத்து செய்ததால் மேலே அப்பீல் செய்திருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கின்ற சட்டத்தில், முதலில் கோட்டாட்சித் தலைவர் ரத்து செய்தாலும், துணை ஆட்சித் தலைவர் அதற்குத் தடை உத்தரவு செய்யவும், இதற்குப் பிறகு வாரியம் தடை உத்தரவு செய்யவும் முறைகள் இருக்கின்றன. ரத்து செய்வதற்கு முன் அவர்களுக்கு இன்பர்மேஷனைக் கொடுத்து, ரத்து செய்யப் போகிறோம் என்று நோட்டீஸ் கொடுத்து ரத்து செய்ய வேண்டிய முறை இருக்கிறது. இதையெல்லாம் இந்த அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது. இப்படியெல்லாம், இல்லாமல் அரசுக்கு அல்லது பொதுமக்களுக்குத் தேவை என்றால் அதை எடுக்க வேண்டிய வழிவகை செய்ய இந்த அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில், இன்றைக்கு மின்சார வாரியத்தினுடைய வேலைகள் தடைப்படாமலும், இந்த அரசு பார்த்துக் கொண்டிருக்கிறது.

[முற்பகல் 9-10]

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, நான் மறுபடியும் அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், முதலிலே மின்சார வாரியம், அமைச்சர் சொல்கிற 1976 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4 ஆம் நாள் அன்றுதான் விண்ணப்பம் கொடுக்கிறார்கள். ஆனால், அங்கேயிருக்கிற அதிகாரிகள் தனிப்பட்டவர்களிடம் விண்ணப்பம் பெற்று முன்தேதியிட்டு, தவறு செய்திருக்கிறார்கள். அரசு அதன் பேரிலே நடவடிக்கை எடுக்க வேண்டும். தனிப்பட்டவர் நிலம் அரசுக்குத் தேவையென்றால் எடுத்துக்கொள்கிறோம். அரசாங்க நிலம் மின்சார வாரியத்திற்கு, சப்-ஸ்டேஷன் அமைக்கத் தேவைப்படுகிறது. அதிலே, உடனடியாக நடவடிக்கை எடுக்காமல் காலதாமதம் செய்கிறார்கள் அதிகாரிகள். அங்கு மின்சார சப் ஸ்டேஷன் அமைக்கப்பட வேண்டும். நிலம் இல்லாத காரணத்தினால், அந்தத் திட்டம் பல ஆண்டுகாலமாக தடைப்பட்டிருக்கிறது. ஆகவே, விரைவில் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, கோட்டாட்சியாளர் ரத்து செய்திருக்கிறார். அதற்குத் மேல்முறையீடு செய்திருக்கிறார்கள். அதையும் ரத்து செய்ய இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

யானைகளுக்குப் பாதுகாப்பு.

* வினா எண் 240— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் யானைகள் அரிதாகி வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம், எனில் அரசு அது பற்றி மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) யானைகளின் எண்ணிக்கை குறைந்து வருவதாகப் பொதுவான கருத்து ஒன்று நிலவுகிறது.

(ஆ) யானைகளின் இருப்பிடமான அடர்ந்த காடுகள் சற்று குறைந்து வருவதும், கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட நீண்ட கால வறட்சி காரணமாக நீர் நிலைகள் வறண்டு போய், அதன் விளைவாக யானைகளுக்கும் நோய் வருவது இதற்கு ஒரு காரணம். இதனைக் கருத்தில் கொண்டு பெரும்பாலும் யானை உறைவிடங்களான ஆனைமலை, முதுமலை, முண்டந்துறை, களக்காடு சரணாலயங்களாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அம்மாதிரியான வனங்களில் உள்ள நீர் நிலைகள் வற்றா வண்ணம் பராமரிப்புச் வேலைகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்திய வன விலங்கு சட்டத்தில் கண்டுள்ள அட்டவணை 1-ல் யானை சேர்க்கப்பட்டுள்ளதாலும் இந்த அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள விலங்குகளை வேட்டையாடுபவர்களுக்குக் கடுமையான தண்டனை அளிக்க வகையிருப்பதாலும் யானைகளைப் பாதுகாக்க ஏதுவாக உள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தமிழ்நாட்டைச் சேர்ந்த யானைகளில் சில அண்டையிலே உள்ள கர்நாடகம், கேரளம் போன்ற மாநிலங்களில் உள்ள காடுகளுக்கு இறை தேடியோ, துணை தேடியோ சென்றுவிடுவதாகக் கூறப்படுகிறது. அதனைத் தவிர்க்க தமிழக யானைகளுக்குத் தனியே அடையாளம் தெரியும் வகையில் அரசு, இலச்சினை ஏதேனும் பொறித்திட ஆவன செய்ய முன்வருமா ?